December 28, 2022; The Indian Express Tamil; Chennai

# வின்ஃபியூச்சர் பரிசு வென்ற சென்னை ஐ.ஐ.டி பேராசிரியர்; மலிவு விலை நீர் சுத்திகரிப்பு சாதனம் உருவாக்கியதற்காக விருது

**வின்ஃபியூச்சர் பரிசு வென்ற சென்னை ஐ.ஐ.டி பேராசிரியர் பிரதீப்; சுத்தமான நீரை உற்பத்தி செய்ய மலிவான மற்றும் நிலையான நானோ பொருட்களை கண்டுபிடித்தற்காக பரிசு**




இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி மெட்ராஸ் (ஐ.ஐ.டி சென்னை) பேராசிரியர் தலப்பில் பிரதீப் ஆண்டுதோறும் நான்கு பிரிவுகளில் வழங்கப்படும்

வின்ஃபியூச்சர் பரிசுகளை வென்றுள்ளார். வளரும் நாடுகளைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சிறப்புப் பரிசு, நிலத்தடி நீரிலிருந்து ஆர்சனிக் மற்றும் பிற கன உலோகங்களை அகற்றுவதற்கான குறைந்த விலை வடிகட்டுதல் அமைப்பை உருவாக்கியதற்காக பேராசிரியர் பிரதீப்பிற்கு வழங்கப்பட்டது.

பேராசிரியர் பிரதீப் சுத்தமான நீரை உற்பத்தி செய்ய மலிவான மற்றும் நிலையான நானோ பொருட்களை கண்டுபிடித்தார். இந்த பொருட்களால் அகற்றப்படும் ஆர்சனிக் மற்றும் பிற பொருட்கள் சுற்றியுள்ள சூழலை பாதிக்காது.

இந்த நானோ முறை, எளிமையான வடிவமைப்புகளைப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்ட மில்லியன் கணக்கான குடும்பங்களைச் சென்றடைய குறைந்த செலவில் நிலத்தடி நீரைச் சுத்திகரிக்கும் வழியை வழங்குகிறது. தொலைதூர பகுதிகளில், இந்த தொழில்நுட்பம் மிகவும் சாதகமானது, ஏனெனில் இதற்கு மின்சாரம் தேவையில்லை.

வின்ஃபியூச்சர் கிராண்ட் பரிசின் மதிப்பு $3 மில்லியன் ஆகும். இது மூன்று சிறப்புப் பரிசுகளையும் உள்ளடக்கியது, ஒவ்வொன்றும் $500,000 மதிப்புடைய பெண் கண்டுபிடிப்பாளர்கள், வளரும் நாடு கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் சிறந்த சாதனைகளைக் கொண்ட கண்டுபிடிப்பாளர்களுக்கு வழங்கப்படும். 71 நாடுகளில் உள்ள 1,000 பரிந்துரைகளில் இருந்து வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

https://tamil.indianexpress.com/education-jobs/iit-madras-professor-wins-vinfuture-prize-innovators-from-developing-countries-566771/

---